**கந்தளாய் பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 செப்தெம்பர் 21 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 04 ஆந் திகதியும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கந்தளாய் பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) புறநெகும செயற்திட்டம் மற்றும் பிரதேச சபை அபிவிருத்தி நிதியம் என்பவற்றின் கீழ் கிடைத்த ரூபா 23,837,388 தொகையிலிருந்து கட்டிட நிர்மாணம் மற்றும் வீதித் திருத்தங்களுக்காக ரூபா 16,433,252 செலவிடப்பட்டு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய ரூபா 7,404,136 தொகையை மீண்டெழும் வருமானத்திற்கு எடுத்ததன் மூலம் மீளாய்வாண்டின் வருமானம் அந்த அளவால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தங்களுக்குரிய வேலை ஆரம்பிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 3,169,721 முற்பணத்திலிருந்து திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ரூபா 2,664,668 தொகை நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தகாருக்குச் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 2,493,993 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 338,347 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 774,912 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டதால் நிலையான வைப்பு வட்டி ரூபா 406,565 தொகை அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டில் சபைக்குக் கையளிக்கப்பட்ட 66 கடைகளையுடைய பொதுச் சந்தைக் கட்டிடம் மற்றும் 24 கடைகளையுடைய பஸ் நிலையக் கட்டிடம் என்பவற்றின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 கடைகளின் வாடகை உரிமையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,917,005 தொகையான கடை வாடகைகளில் 2008 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 92,110 தொகையான வாடகை பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாது கிடைக்க வேண்டிய வாடகையிலிருந்து ஈடுசெய்யப்பட்டமையினால் பெறவேண்டிய கடை வாடகை ரூபா 1,824,895 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் பெற வேண்டிய கடை வாடகை ரூபா 92,110 தொகை கணக்குகளில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 30,189,973 பெறுமதியான சொத்து விடயங்களை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோப்பின் 59 ஆவது விதி | சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வியாபார நிறுவனங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி, மாகாணசபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்படவேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான 18 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலுவை வருமானம் தொடர்பான காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) மாகாண நிதி விதி இலக்கம் 237 | வழங்கப்பட்டு 06 மாதங்களை விஞ்சியிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 64,990 பெறுமதியான 09 காசோலைகள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,405,689 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 4,846,449 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| ஆதனவரி | 1,850 | 2,371 | 10,852 |
| வாடகை | 16,802 | 3,954 | 1,825 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 734 | 856 | - |
| ஏனைய வருமானம் | 7,546 | 6,976 | 4,000 |

#### 2.2.2 முத்திரைக் கட்டணம்

கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாகக் கிடைக்க வேண்டிய பணத்தை இனங்கண்டு பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

#### 3.1.1 நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தை மற்றும் பஸ் நிலையக் கடைகளை வியாபாரிகளுக்கு வழங்காமை

2011 ஆம் ஆண்டின் போது 32 பழைய கடைகள் உடைத்து அகற்றப்பட்டு புதிய பொதுச் சந்தையில் 66 கடைகளும், பஸ் நிலையத்தில் 24 கடைகளும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 2013 மார்ச் 27 ஆந் திகதி பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த போதும் அதில் 90 கடைகள் சபைக்குக் கையளிக்கப்பட்ட திகதி முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.1.2 பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்தல்**

2014 யூலை 02 ஆந் திகதி நடைபெற்ற பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் பின்வரும் சிபாரிசகள் அமுல்படுத்தப்படவில்லை.

(அ) பழுதுபார்ப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 23 பொருள் வகைகளை பழுதுபார்ப்பதற்கும், அகற்றுவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட 138 பொருள் வகைகள் மற்றும் 363 புத்தகங்கள் என்பவற்றை அகற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 04 நூலகங்களில் காணாமல் போயிருந்ததாக இனங்காணப்பட்ட 4948 புத்தகங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருட்பதிவேட்டுப் புத்தகம் மீளத்தயாரித்தல்.

**3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

1997 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட வான் வண்டி 2013 நவம்பர் மாதத்திலிருந்தும், 1987 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட உழவு இயந்திரமொன்று 2012 ஏப்ரல் மாதத்திலிருந்தும், 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட கெப் வண்டி 2015 யூன் மாதத்திலிருந்தும் செயற்பாடற்றதாக வாகனத் தளத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**3.3.1 மின்சார சுடலைக்கூட நிர்மாணம்**

2012 நவம்பர் 08 ஆந் திகதி ரூபா 15,848,605 ஒப்பந்தப் பெறுமதியில் கந்தளாய் நகரத்தில் மின்சார சுடலைக்கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த நிர்மாணத்திற்குரிய ரூபா 3,169,721 தொகை 2012 நவம்பர் 20 ஆந் திகதி முற்பணமாக ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாருக்கு ஆற்றப்பட்ட வேலைப் பெறுமதிக்குச் செலுத்தப்பட்ட ரூபா 9,848,484 பெறுமதியில் ரூபா 505,053 தொகை மாத்திரம் முற்பணமாகக் கழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 3,169,721 தொகையான முற்பணத்தின் பிணை முறியின் செல்லுபடிக் காலஎல்லை 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் அதனை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 792,430 தொகையான செயலாற்றல் பிணை முறியின் செல்லுபடிக் காலஎல்லை 2013 மார்ச் 30 ஆந் திகதி நீடிக்கப்பட்டிருந்த போதிலும் பின்னர் கணக்காய்வுத் திகதி வரையிலும் அதனை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவிலலை.

(ஈ) 2007 இன் 13 ஆம் இலக்கம் மற்றும் 2009 இன் 18 ஆம் இலக்க நிதித்திருந்த அதிகாரச்சட்ட திருத்தங்களின் கீழ் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 9,848,484 தொகைக்குரிய நிர்மாணச் சான்றிதழ் நிதிய வரியான (CIGFL) ரூபா 24,621 தொகை நிறுத்தி வைக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 பல்நோக்குக் கட்டிட நிர்மாணம்

சபை 2014 மார்ச் 18 ஆந் திகதி ரூபா 51,093,960 தொகையான ஒப்பந்தப் பெறுமதியில் பல்நோக்குக் கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காருடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதி முதல் 06 மாதங்களுக்குள் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் நிர்மாணத்தின் செயல் முன்னேற்றம் 38 சதவீத அளவான கீழ்மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) 1192 சதுர மீற்றரான கட்டிடத்தில் கொங்கிரீட் தட்டில் 895 சதுர மீற்றர் அளவில் கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. எஞ்சிய 297 சதுர மீற்றர் அளவிற்கு செட்டரின் அடிப்படையில் கம்பிகள் உட்புகுத்தப்பட்டிருந்த போதிலும் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக கொங்கிரீட் இடப்படாமல் கம்பி துருப்பிடிப்பிடித்தலுக்கு உள்ளாகியிருந்தது.

(இ) ஒப்பந்தகாரரின் செயல்முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிர்மாணங்கள் கைவிடப்பட்டிருந்தன.

### 3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

பிரதேச சபை கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2011 யூலை 25 ஆந் திகதி சமூக சபைச் சங்கத்துடன் ரூபா 324,530 ஒப்பந்தப் பெறுமதியில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒப்பந்த உடன்படிக்கைகளின் படி 2012 சனவரி 25 ஆந் திகதியளவில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2015 செப்தெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் கையளிக்கப்பட்ட வேலைகள் உப ஒப்பந்தமாக வழங்க முடியாதிருந்த போதிலும் ஒப்பந்தகாரரால் நிர்மாணங்கள் உப ஒப்பந்தக்காரருக்கு கையளிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 03 | 01 | 02 |
| இரண்டாம் நிலை | 22 | 18 | 04 |
| மூன்றாம் நிலை | 38 | 35 | 03 |
| மொத்தம் | 63 | 54 | 09 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஏப்ரல் மாதம் முதல் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பிரதேச சபையின் செயலாளர் பதவிக்காக தகுதியான நபரொருவரை நியமிப்பதற்கு கணக்காய்வுத் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பதில் கடமை அடிப்படையில் செயலாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) ஆயுர் வேத வைத்திய உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வருமானப் பரிசோதகர், இயந்திர இயக்குனர் மற்றும் வேலைப் பரீட்சகர் போன்ற பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) மனித வள முகாமைத்துவம்